59—

பள்ளிக் கட்டடம்

***29449—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மானிதஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மானிதஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் திட்டம்-10-ல் விதிகளுக்குட்பட்டு, கூடுதல் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் மானிதஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியினுடைய மாணவ, மாணவிகளுடைய நலன் கருதி, நபார்டு திட்டத்தின்மூலமாகக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் உள்ள அதகப்பாடி மற்றும் கடகத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளிகளில், தலா 700-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் படித்து வருகின்றார்கள். அங்கே வகுப்பறைக் கட்டடங்கள் பற்றாக்குறையின் காரணமாக, மரத்தடியில் அமர்ந்து இன்றைக்குப் பாடம் படித்து வருகிறார்கள். ஆகவே, கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், இந்தப் பள்ளிகளுக்கும் புதிய கட்டடம் கட்டித் தர ஆவன செய்வாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2009 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய அந்த அதகப்பாடி, கடகத்தூர் பள்ளிகளுக்கும், இந்த ஆண்டிலே நபார்டு வங்கித் திட்டத்தின் 10-வது பகுதியின்கீழே எடுத்துக் கொள்வதற்கு அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். அவர் குறிப்பிட்டதைப்போல, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப்பிறகு கடந்த இரண்டே முக்கால் ஆண்டுகளில் மாத்திரம், நபார்டு வங்கி உதவியின்கீழ் ஏறத்தாழ 770 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டு, ஏறத்தாழ 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வகுப்பறைகளைத் தமிழகமெங்கும், கல்வி வளர்ச்சிக்காகக் கட்டித் தந்திருக்கிறோம். எனவே, அந்த வரிசையில் தொடர்ச்சியாக நபார்டு வங்கியினுடைய அந்தத் திட்டத்தில், விதிகளுக்குட்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய மேலும் இரண்டு பள்ளிகளும் பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி இரா. இராணி.

திருமதி இரா. இராணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் பகுதியில் உள்ள ப்ளஸ் 2 மாணவர்கள் 5 கிலோ மீட்டர் பயணம் செய்து தேர்வு எழுதுகிறார்கள். ஆகவே, மாணவ, மாணவிகளின் நலன் கருதி, உப்பிலியாபுரத்திலேயே தேர்வு எழுதிட வசதியாகத் தேர்வு மையம் தொடங்கிட அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். உப்பிலியாபுரம் மிக மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதி. அது மலைவாழ் மக்கள் அதிகமாக வாழக்கூடிய ஒரு பகுதி என்ற அடிப்படையில் அந்தப் பள்ளியில் இந்த ஆண்டு தேர்வு மையம் அமைத்துத் தருவதற்கு நானும் மிகுந்த முயற்சிகள் செய்தேன். ஆனால், வகுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த norms-லே அந்தப் பள்ளி வரவில்லை. இருந்தாலும், உப்பிலியாபுரம் பகுதியினுடைய புவியியல் சூழ்நிலைகளை, அதாவது இருக்கக்கூடிய environment-ஐக் கருத்திலே கொண்டு, சிறப்பு அனுமதி வழங்கலாமா என்று செயலாளரிடத்திலே விவாதித்து, அதற்குரிய முயற்சிகளை நான் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

60—

பாலம்

***126—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நடுமலைப் பாலத்தை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள நடுமலைப் பாலத்தை அகலப்படுத்தி, சுமார் ஏழரை மீட்டர் அகலம் கொண்ட பாலமாகக் கட்டுவதற்குச் சுமார் ரூ.40 இலட்சம் மதிப்பிலான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்குரிய அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. திட்டம் விரைவில் தொடங்கி, அந்தப் பணிகள் முடிக்கப்படும்.